OS. 140/2025

நாள். 02.04.2026

வா.சா.  – 1 ராஜமோகன்

<u>பிரதிவாதிகள் தரப்பு  குறுக்கு விசாரணை:–</u>

நான் பிரதிவாதிகள் மீது எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அடமான கடனை திரும்ப பெறுவதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கறிஞருக்கு பிராது மற்றும் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்ய விவரங்கள் நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன். மேலும் வீடுகள் வாடகைக்கு விட்டு வருமானம் பெற்று வருகிறேன். எனக்கு வீட்டு வாடகை மூலம் மாதம் எவ்வளவு வருமானம் வருகிறது என்றால் ரூ.50000/–. 1ம் பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் 2ம் பிரதிவாதியின் மூலமாக தான் தெரியும். 2ம் பிரதிவாதி எனக்கு தாய்மாமன் என்றால் சரிதான். நான் வங்கியில் கணக்கு வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். எந்த வங்கியில் என்றால் பாங்க் ஆப் இந்தியா.  1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியிடம் அடமானமாக வைத்த பத்திரத்தை 2ம் பிரதிவாதி 5.10.2016ம் தேதியில் இராமேஸ்வரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் என்னிடம் Made over எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி என்னிடம் எவ்வளவு பணம் பெற்றுள்ளார் என்றால் ரூ. 4 இலட்சம். நான் பணத்தை 2ம் பிரதிவாதிக்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கொடுத்தேனா அல்லது வீட்டில் வைத்து கொடுத்தேனா என்றால் வீட்டில் வைத்து கொடுத்தேன். நான் 2ம் பிரதிவாதியிடம் தான் பணம் கொடுத்தேன். நான் பணம் 500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேனா அல்லது 1000 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேனா என்றால் 1000 ரூபாய் நோட்டுகளாக 4 கட்டுக்கள் கொடுத்தேன். அந்த பணத்தை நான் வங்கியிலிருந்து எடுத்து கொடுத்தேனா அல்லது கையிருப்பிலிருந்து எடுத்துக்கொடுத்தேனா என்றால் கையிருப்பிலிருந்து எடுத்து கொடுத்தேன். 2ம்

பிரதிவாதி எனக்கு எவ்வளவு வட்டி தருவதாக சொன்னார் என்றால் மாதம் ரூபாய் 100 க்கு 2 வீதம் வட்டி தருவதாக சொன்னார். 2ம் பிரதிவாதி கடன் பெற்ற பிறகு 1ம் பிரதிவாதி வேறு ஒரு சொத்தை அடமானமாக காட்டி ரூ.2 இலட்சம் என்னிடம் கடனாக பெற்றுள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி ரூ. 6 இலட்சத்திற்கும் மாதம் மாதம் வட்டி கொடுத்து வந்தாரா என்றால் இல்லை. என் தந்தை தமிழக அரசின் சர்வே துறையில் பணிபுரிந்தார் என்றால் சரிதான். எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் 2018 மார்ச் மாதம். நான் லேவாதேவி தொழில் செய்வதற்கு அரசாங்கத்தில் உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி எத்தனை வருடத்திற்கு அடமான கடன் பத்திரம் எழுதிக்கொடுத்தியிருந்தார் என்றால் 1 வருடம். நான் 2ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஆவணத்தின் படி, 1 வருடம் முடிந்த பிறகு 2017ம் ஆண்டிலேயே அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. 1, 2 பிரதிவாதிகள் தவிர வேறு யாருக்கும் கடன் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி Made over அடமான கடன் பத்திரம் எழுதிக்கொடுத்த பின்பு 1ம் பிரதிவாதிக்கு நான் கூடுதலாக ரூ. 2 இலட்சம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த தொகைக்கு நான் இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் 1, 2 பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2016ம் ஆண்டு என் அப்பா தான் கடன் கொடுத்தார் என்றும் எனக்கு கடன் கொடுத்த விவரம் எதுவும் தெரியாது என்றும் என் தந்தை இறக்கும் வரை வட்டி தொகைகளை அவர் தான் வசூலித்து வந்தார் என்றும் என் அப்பா இறந்த பிறகு 2ம் பிரதிவாதி எனக்கு வட்டித்தொகை கொடுக்க வரும் போது தான் 2ம் பிரதிவாதி எனக்கு Made Over கடன் பத்திரம் எழுதிக்கொடுத்த விவரம் தெரியவந்தது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி மாதம் மாதம் ரூ.6 இலட்சத்திற்கு 3 வட்டி வீதம் ரூ.18,000 வீதம் 2025 மே மாதம் வரை ரூ.20,16,000/- வட்டிக்காக செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. நான் வட்டியை வாங்கிக்கொண்டு வட்டித்தொகைக்கு எந்த ரசீதும் 2ம் பிரதிவாதிக்கு உறவினர் என்ற முறையில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2025ம் வருடம் மே

மாதம் வரை நான் வட்டி தொகை வாங்கி வந்ததால் தான் 2025 ம் வருடம் அடமான கடன் செலுத்த வேண்டிய காலம் முடிந்த பிறகும் வட்டி மற்றும் அசல் தொகையை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் எனது வழக்குரையில் தவறான விவரங்களை கூறி பொய்யான வழக்கு மூலங்களின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் கேட்டுள்ள பரிகாரங்கள் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் அதனால் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.